செய்தி வெளியீடு எண்:349 நாள் : 16.07.2015

**<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி டெங்கு மற்றும் பன்றிக் காய்ச்சல் போன்ற தொற்று நோய்களைத் தடுக்க உள்ளாட்சி அமைப்புகளில் போர்க்கால அடிப்படையில் முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என்றும் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும் தான் 98 சதவீத ஊரகப் பகுதிகளில் பாதுகாப்பப்பட்ட குடிநீர் குழாய் மூலமாக வழங்கப்படுகிறது என்றும் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு எஸ்.பி.வேலுமணி தகவல்</u>**

******

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் ஆணைப்படி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி மற்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் தலைமையில் தமிழ்நாட்டில் பருவமழை காலத்தில் டெங்கு, பன்றிக் காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் பரவாமல் தடுக்க உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சுகாதாரத்துறை இணைந்து எடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து சென்னை அரசு உயர் பன்னோக்கு சிறப்பு மருத்துவமனை வளாகத்தில் ஆய்வுக் கூட்டம் நடத்தினர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, கடந்த டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் தமிழ்நாட்டில் குறிப்பாக திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, திண்டுக்கல் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் டெங்கு காய்ச்சல் உள்ளிட்ட தொற்று நோய்களை முற்றிலுமாக ஒழித்திட மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தலைமையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கள் துறை/ஊரக வளர்ச்சித்துறை/மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலாளர்கள், மாவட்ட ஆட்சியர்கள், மாநகராட்சி ஆணையர்கள், நகராட்சி ஆணையர்கள், பேரூராட்சி மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் மற்றும் மருத்துவத்துறை அலுவலர்களுடன் திருநெல்வேலி, சங்கரன்கோவில், இராஜபாளையம், திண்டுக்கல், கரூர், கோயம்புத்தூர் ஆகிய பகுதிகளில் நேரில் சென்று ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, போர்க்கால

அடிப்படையில் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, தொற்று நோய்கள் முற்றிலும் ஒழிக்கப்பட்டது.

வரும் ஆண்டில் டெங்கு, பன்றிக் காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் தமிழகத்தில் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதற்காக அனைத்து மாநகராட்சி ஆணையர்கள், நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர்கள், நகராட்சி ஆணையர்கள், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள், ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள், செயற்பொறியாளர்கள், தொழிலாளர் நலத்துறை மற்றும் சுகாதாரத் துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் 14.07.2015 அன்று நடத்தப்பட்டது

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தமிழகத்தில் வரும் மழைக் காலத்தில் சென்னை மாநகராட்சி உட்பட 12 மாநகராட்சிகள், 124 நகராட்சிகள், 528 பேரூராட்சிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 12,524 ஊராட்சிப் பகுதிகளில் டெங்கு, பன்றிக் காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் ஏற்படாமல் தடுக்க எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அரசு அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். சென்ற ஆண்டு டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட இடங்களான கோயம்புத்தூர், மதுரை, தேனி, திண்டுக்கல், திருநெல்வேலி, கன்னியாகுமரி, விருதுநகர், திருப்பூர் போன்ற மாவட்டங்களில் சிறப்பு கவனம் செலுத்தி, தொற்று நோய்களை முற்றிலும் ஒழிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும் தான் 98 சதவீத ஊரகப் பகுதிகளில் பாதுகாப்பப்பட்ட குடிநீர், குழாய் மூலமாக வழங்கப்படுகிறது என்றும் பெருமிதத்துடன் தெரிவித்தார். மேலும் தொற்று நோய்கள் ஏற்படாமல் தடுக்க எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பின்வருமாறு அறிவுரை வழங்கினார்:

1) குடிநீர் ஆதாரம் போதிய அளவு உள்ள உள்ளாட்சிகளில் சுகாதாரமான குடிநீரை அன்றாடம் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2) குடிநீரில் குறைந்தபட்ச குளோரின் அளவு 0.2 பிபிஎம் ஆக இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

3) திறந்த நிலை கிணறுகள் போன்ற நீர் ஆதாரங்களிலும் குளோரின் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4) குடிநீர்த் தேக்கத் தொட்டிகள் மற்றும் மேல்நிலைத் தொட்டிகளை சுத்தமாகப் பராமரிக்க வேண்டும்.

5) வீடுகள் மற்றும் பொது இடங்களில் கொசுக்கள் உற்பத்தியாவதற்கு காரணமான டயர், கொட்டாங்கச்சி மற்றும் திறந்த நிலை தொட்டிகள் ஆகியவற்றில் தண்ணீர் தேங்காத வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

6) மழைநீர் வடிகால் வழிகளை தினமும் சுத்தப்படுத்தி வடிகாலில் கழிவு நீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும் கொசு ஒழிப்பு மருந்தை சரியான கால இடைவெளியில் தெளிக்க வேண்டும்.

7) பாதிப்பு ஏற்பட்டுள்ள பகுதிகளில் அருகிலுள்ள மாவட்டங்களிலிருந்து சுகாதார பணியாளர்களை பணியில் ஈடுபடுத்த நடவடிக்கை வேண்டும். அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊரகப் பகுதிகளில் காலை 6 மணிக்கு அலுவலர்கள் நேரில் சென்று துப்புரவுப் பணிகளை ஆய்வு செய்ய வேண்டும்.

8) கொசு உற்பத்தியாகும் ஆதாரங்களை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும்.

9) தண்ணீர் தேங்கி நிற்கும் பகுதிகளிலும், குடியிருப்புப் பகுதிகளில் உள்ள வீடுகளின் உள்ளேயும், வெளியேயும் புகை அடிக்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் மருந்தும் தெளிக்க வேண்டும்

10) கொசுமுட்டை மற்றும் புழுக்களை ஒழித்திட தேவையான அளவு மருந்தினை இருப்பில் வைத்துக் கொள்ள வேண்டும்.

11) தொற்று நோய்களைப் பரப்பும் ஏ.டி.எஸ். கொசுக்களை முழுமையாக ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

12) புகை அடிக்கும் இயந்திரங்கள் போதுமான அளவில் உள்ளதை உறுதி செய்ய வேண்டும். தேவைப்படின் உடனடியாக புதிய இயந்திரங்களை கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

13) மகளிர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் புதுவாழ்வுத் திட்டத்தில் உள்ள அமைப்புக்களின் உறுப்பினர்கள், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள், கிராம வறுமை ஒழிப்பு குழு உறுப்பினர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்கள் ஆகியோரை தொற்று நோய் ஒழிப்புப் பணியில் முழுமையாக ஈடுபடுத்தி பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். முக்கியமாக கைபிரதிகள் வழங்குதல், ஊர்வலம், தகவல் கல்வி மற்றும் தொடர்பு ஆகிய முறைகளை பயன்படுத்தி விழிப்புணர்வு பிரச்சாரங்கள் செய்து டெங்கு காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் பரவுவதை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

14) டெங்கு ஒழிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு பூரண ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

15) பள்ளி, கல்லூரி மாணவர்களையும் விழிப்புணர்வுப் பணியில் ஈடுபடுத்த வேண்டும்.

16) இப்பணியில் அனைத்து தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி உறுப்பினர்கள் மற்றும் அப்பகுதியை சேர்ந்த முக்கிய பிரமுகர்களையும் சந்தித்து அவர்களது ஒத்துழைப்புடன் இப்பணியினை சிறப்பாக செய்ய அறிவுரை வழங்கப்பட்டது.

17) டெங்கு காய்ச்சல் பாதிப்புகள் அறியப்பட்டுள்ள இடங்களில் மேற்படி நடவடிக்கைகள் தடையின்றி தொடர்ந்து போர்க்கால அடிப்படையில் தீவிரமாக நடைபெற ஏதுவாக சிறப்பு குழுக்கள் அமைத்து சுகாதார துறை அலுவலர்களுடன் இணைந்து தடுப்பு நடவடிக்கைகள் ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று மேற்கொள்ள வேண்டும்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயலாளர் திரு ஆர்.ராதாகிருஷ்ணன்,இ,ஆ.ப., இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை ஆணையர் திரு மோகன் பியாரே,இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சிறப்புச் செயலாளர் திரு எஸ்.செந்தில்குமார்,இ.ஆ.ப., தொழிலாளர்

நலத்துறை ஆணையர் திருமதி அமுதா,இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு.ஜி.பிரகாஷ், இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு. ராஜேந்திர ரத்னூ, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி இயக்குநர் திரு க.பாஸ்கரன்,இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (சுகாதாரம்) திரு இரா.கண்ணன்,இ.ஆ.ப., மருத்துவக் கல்வி இயக்குநர் மரு.எஸ்.கீதாலட்சுமி, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் மரு.அ.சந்திரநாதன், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை இயக்குநர் மரு. க.குழந்தைசாமி, மருந்து கட்டுப்பாட்டுத்துறை இயக்குநர் திரு அப்துல் காதர் உட்பட அனைத்து மாநகராட்சி ஆணையர்கள், நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர்கள், தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்பு பொறியாளர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி துறை திட்ட இயக்குநர்கள், பேரூராட்சி உதவி இயக்குநர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

– – – – –

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**